சுருக்கம்

[illegible] – கல்வித் தகுதிகள் – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் [illegible] வழங்கப்படும் ஆர்க்கிடெக்சுரல் அஸிஸ்டன்ட்ஷிப் (Architectural Assistantship ) பட்டயத்தினை பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை இளநிலை வரைகலைஞர் (Junior Draughtsman) பதவி நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக அங்கீகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்( புஇ.3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.122

நாள் : 29–11–2004.

படிக்கப்பட்டது :

1) அரசாணை (நிலை) எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.20–12–1993.
2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையச் செயலாளரின் கடித எண்.2881/ ஆர்.என்.டிஎப் 1 /2001, நாள் 15–7–2003.
3) சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, கடித எண் 50244/பணி 3 (2)/ 2004, நாள் 8–9–2004.

******

ஆணை :

தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் கழகம் வழங்கும் "டிப்ளமோ இன் ஆர்க்கிடெக்சுரல் அஸிஸ்டண்ட்ஷிப்" படிப்பை தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள பொருளாதாரம் மற்றும் புள்ளி இயல் துறையில் இளநிலை வரை கலைஞர் (Junior Draughtsman) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக அங்கீகரிப்பதற்கு, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அரசாணை நிலை எண்.441, (பணி–ஆர்) நாள்.20--12–1993 –ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வித் தகுதி இணை அங்கீகரிப்பு குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அந்தக் குழுவும் 03.07.2003 அன்று நடந்த குழு கூட்டத்தில் " தமிழ்நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் கழகம் வழங்கும் "டிப்ளமோ இன் ஆர்க்கி டெக்சுரல் அஸிஸ்டண்ட்ஷிப் படிப்பை" தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள பொருளாதாரம் மற்றும் புள்ளி இயல் துறையில் "இளநிலை வரைகலைஞர்" (Junior Draughtsman) பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையாக கருதலாம் என்று தேர்வாணையத்தின் பரிந்துரைக்குழு பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

2. இளநிலை வரைகலைஞர் பதவிக்கான கல்வித்தகுதிகளாக, பொதுசார்நிலை பணி

த.பி.பா.

விதிகளில் கீழ்காணும் கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. அரசு தொழில்நுட்ப தேர்வில் கையால் படம் வரைதல் மற்றும் மாதிரி படம் வரைதல் ஆகியவற்றில் மேல்நிலையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அரசு கவின்கலை கல்லூரி நடத்துகிற நுண்கலை மற்றும் ஓவியக்கலை படிப்பில் பட்டயப்படிப்பு தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது

2 வரைகலை பயிற்சிக்காக (கட்டிடம் / இயந்திரவியல்) தேசிய பயிற்சி மன்றம் வழங்குகிற தேசிய சான்றிதழை பெற்றிருக்க வேண்டும். அல்லது

3. தமிழ்நாடு மாநில தொழில்நுட்ப கல்வி கழகம் மற்றும் தொழில்நுட்பக்கல்வி பயிற்சித்துறை நடத்துகிற கட்டிட / இயந்திர பொறியியல் படிப்பில் பட்டயப் படிப்புத் தகுதியை பெற்றிருக்க வேண்டும். அல்லது

4. வரைகலையில் (கட்டிட / இயந்திரவியல்) வாழ்க்கை தொழிலில் பயிற்சி பெறுவதற்காக தேசிய மன்றம் வழங்குகிற தேசிய தொழில் பழகுநர் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

4. தற்போது இணைக்கல்வித் தகுதிக்கான கல்வி நிர்ணயக்குழு தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சிக் கழகம் வழங்கும் " டிப்ளோமோ இன் ஆர்க்கிடெக்சுரல் அஸிஸ்டன்ட்ஷிப் " படிப்பினை தமிழ்நாடு பொது சார்நிலைப்பணிகளில் அடங்கியுள்ள பொருளாதாரம் மற்றும் புள்ளிஇயல் துறையில் "இளநிலை வரைகலைஞர்" (Junior draftsman) பதவிக்கான இணைக் கல்வித்தகுதியாக கருதலாம் என பரிந்துரைத்துள்ளது. பார்வை 3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் தேர்வாணையத்தின் மேற்காணும் பரிந்துரையினை ஏற்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

5. இணைக்கல்வித்தகுதி நிர்ணயக்குழுவின் பரிந்துரையை அரசு தீவிர பரிசீலினை செய்த பின் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்து உள்ளது.. அவ்வாறே தமிழ்நாடு மாநில கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநில கழகம் வழங்கும் " டிப்ளமோ இன் ஆர்க்கிடெக்சுரல் அஸிஸ்டண்ட்ஷிப்" படிப்பை தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள பொருளாதாரம் மற்றும் புள்ளி இயல் துறையில் "இளநிலை வரைகலைஞர்" (Junior Draughtsman) பதவி நியமனத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு இணையானதாக கருதலாம் என ஆணையிடுகிறது.

6. இது குறித்து விதிகளில் தகுந்த விதி திருத்தம் வெளியிட அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்குமாறு பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை , சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. எஸ் ஸ்ரீபதி,
அரசுச் செயலர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் இயக்குநர்,
பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை , சென்னை-6.

3
~~13~~/35

177



செயலாளர், அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
இயக்குநர் , தொழில்நுட்பக்கல்வி, சென்னை-25
நகல் :
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர் / ஜே) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

கு. அண்ணாதுரை 30/11/04
பிரிவு அலுவலர்.
29/11/04

Subtd to S.O.

May be transfered to RND-'B' Sec thro' Tappal Sec.

30.5.05

30/5/05